Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிவரு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-௭௫] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஸு தைமீ ௧௧உ வெள்ளிக்கிழமை 24 January, 1964 [ஒ-௪௯]

உ

## சைவ வரம்பிடைச் சீர்பெற வளர்க

சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணவர்களாலும் அன்பர்களாலும் ஆரம்பிக்கப்பெற்று வெளிவரும் இந்துசாதனப் பத்திரிகை தான் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை சைவசமயாபிவிருத்திப்பொருட்டும் தமிழ் வளர்ச்சிப்பொருட்டும் பெருந் தொண்டு செய்து கொண்டு வருகிறது. இப் பத்திரிகை இன்னும் இதுபோலவே சைவவரம்பிகவாது நல்ல கட்டுரைகளைத் தாங்கிச் சைவ உலகிற்கு நற்பயன் தரவேண்டுமென்று எல்லாம் வல்ல சிவபிரானைப் பிரார்த்திக்கின்றேம். இப்பத்திரிகையைத் தளரவிடாது அபிமானிப்பது சைவர் கடமையாகும்.

இப் பத்திரிகையை நடத்தும் சபை உறுப்பினர், ஆதரிப்போர் அனைவருக்கும் எமது மனமுந்த ஆசியை வழங்குகின்றேம்.

## சித்தர்கள் கண்ட சைவ சித்தாந்தம்

சித்தாந்த அறிஞர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

முற்றொடர்—2

சிவஞான போதத்துக்கு உரை பல உண்டு அவைகளுள் திட்ப நுட்பம் சிறந்தது சிவஞானசுவாமிகள் உரை. அவர் இருவகை உரை இயற்றினர். ஒன்று சிற்றுரை, மற்றென்று பேருரை. பேருரை சிவஞான பாடிய மென்றும், திராவிட மாபாடிய மென்றும் வழங்கப்படுகிறது.

மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்தின் அகத்தைத் திறந்து காட்ட வல்ல திறவு சிவஞான முனிவர் உரையே என அறிஞர்கள் கூறுகின்றனர். சிவஞான முனிவர் நுண்ணுடல் கொண்டு மெய்கண்டாருடன் பேசிப்பேசி உரை வரைந்தாரோ என்று நினைக்குமாறு அவர்தம் உரை அமைந்திருக்கிறது.

சிவஞானமுனிவர் வடமொழிக் கடலையும், தென்மொழிக் கடலையும் உண்ட பெரும் கொண்டல். அக் கொண்டல் கொழித்த மழையின் தேக்கம் சிவஞானபாடியம் சிவஞான முனிவரது தத்துவ ஆராய்ச்சி நுட்பத்தை நோக்கும்போது நீலகண்டரும் சங்கரரும், இராமாநுசரும் மாத்துவரும் ஒருங்கொண்டு சிவஞான முனிவராக வந்தனரோ என்றும் அவர்தம் தமிழ்நடையை நோக்கும்போது நக்கீரரும், இளம்பூரணரும், பரிமேலழகரும், நச்சினார்க்கினியரும் ஒருங்கொண்டு போந்தனரோ என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

கலைகளெல்லாம் சிவஞான முனிவராகத் தோன்றின போலும்; தருக்கமும், வியாகரணமும், இலக்கியமும், இலக்கணமும், தமிழ்ச் சிவஞான முனிவருக்குப் பணியாட்களாகித் துணைபுரியத் தவங்கிடந்தன.

சிவஞான போதத்துக்குச் சிவஞானமுனிவர் உரை நிலனாய் நீராய்க் காற்றாய் ஒளியாய்த் துணை செய்து வருகிறது. சிவஞானபோதத்தைத் தழுவிப் பதி பசு பாசத்தின் உண்மையையும், அத்துவிதத்தின் சிறப்பையும், பிறநுட்பங்களையும் சிவஞானமுனிவர் விளக்கித் தெளிவு செய்துள்ள பெற்றியை எச்சொல்லால் சொல்வது?

சிவஞானமுனிவர் கருத்துக்கள் பல தற்கால விஞ்ஞானக் கலைக்கு அரண் செய்வனவாகத் திகழுகின்றன. இனி வரும் தத்துவ உலகில் சிவஞான முனிவர் பாடியம் தலைமைபெற்றிருக்கு மென்பதற்கு ஐயமில்லை. தற்காலச் சைவ உலகம் சிவஞானசுவாமிகளது பெருமையையும் சைவ உலகத்துக்கு அவர்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## நற் சிந்தனை

மாசற்ற நெஞ்சுடைய
மாதவர்தா மண்ணகத்தே
ஆசற்ற நற்றுறவோ ராம்.

## பன்னிரு திருமுறை விழா

இலங்கையில் என்றுமே நடைபெறாத பன்னிரு திருமுறைப் பாராயணம் சென்ற மார்கழிமாதம் 1-ந் திகதி சித்தங்கேணி, ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவிலில் தினமும் நடைபெறுகின்றது.

இந்த மகத்தான வைபவம் சிவஸ்ரீ. வை மு. குமாரசாமிக் குருக்களுடைய ஆர்வத்தாலும், முயற்சியாலும இனிது நடைபெற்று வருகின்றது.

வேதங்களில் உள்ள மந்திரங்களுக்கு ஓதுகின்ற முறை எப்படி அமைந்திருக்கின்றதோ, அப்படியே தமிழிலும் சைவத் திருமுறைகளை ஓதுவதற்கு முறை அமைந்திருக்கின்றது. திருமுறைகளில உள்ள பாக்கள் மந்திரம் போன்றவை. இவற்றைப் பண்முறையோடு பாடிவருபவர் ஆ. சி. நடராசா அவர்கள் இவர் இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதம் படித்துப் பட்டம் பெற்றவர் சைவ அபிமானிகள் அனைவரும திருமுறைப் பாராயணத்தில் கலந்து நன்மைபெறும்படி வேண்டிக்கொள்ளுகின்றேம்.

## இலவச சமய தீட்சை

அகில இலங்கைப் பொதுசன சேவைச் சங்க ஆதரவில் பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் அவர்கள் 26-1-64ல் வண்ணை வைத்தீஸ்வரதேவஸ்தானத்திலும், 2-2-64 ல் சண்டிருப்பாய் சீரணிநாகம்மாள் தேவஸ்தானத்திலும் 9-2-64 ல் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்திலும் சைவமக்களுக்குச் சமய தீட்சை செய்துவைப்பார்கள். விரும்புவோர் குறித்த இடங்களுக்கு ஆசார சீலராய்ச்சேரும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.

## இந்துசாதனம் வாழி எந்நாளும்!

☆

தெய்வத் தமிழ்மொழி வாழ்க — எங்கள்
தேயத்து மக்கள் சிறப்போடு வாழ்க
சைவத் தனித்தொண்டு செய்யும் — இந்து
சாதனம் வாழி தழைத்து நீடுழி.

* * * *

நல்லையில் நாவலர் பெருமான் — வந்து
நாட்டிய சைவத் திருநெறித் தொண்டு
மல்ல லுலகினில் வாழும் — வகை
வளர்க்கின்ற சாதனம் வாழியெந் நாளும்.

—நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்.

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதீ

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

உ

## சைவசாதனம் இந்துசாதனம் அது வாழ்க.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

சிவ சம்பந்தம் சைவம். மல சம்பந்தியைச் சிவ சம்பந்தியாக்கிச் சீவனைச் சிவனுக்குவது சைவம். 'வேதாந்தத் தீதில் பொருள்கொண்டுரைக்கு நூல் சைவம்' என்பது சிவஞான சித்தியார். வேதாந்தத் தீதில் பொருளாகிய சைவப் பொருளாவது, 'உள்ளது போகாது; இல்லது வாராது' என்னுஞ் சற்காரிய வாத அடிப்படைப் பொருண்மையாம்; இல்லதாகிய உலகம் இல்லதாகிய சீவனுக்குத் தோன்றும். அஃதாவது இல்லது வரும் என்கின்ற கபிற்றரவாகிய மித்தியா வாதப் பொருண்மைத் தன்ரும்.

இவ்வாருய சைவம், சாத்திரங்கள் தத்துவ விசாரஞ் செய்து அறுவகையென்று அறுதியிட்டுப் பேசும் அறுவகைச் சமயங்களுள் முதற்கண் வைத்தெண்ணப் படுவதாம். 'மெய்தரு சைவமாதி இருமூன்று' என்பது சித்தியார் வாய்பாடு.

அறுவகைச் சமயத்துள் முதன்மைத்தாய சைவம், ஏனைய ஐந்து சமயங்களுந் தன்பால் வந்து முற்றும் பெருமையும் படைத்ததாம். அது "ஒன்றேடொன்று சென்றுறு நிலையில் ஆறும் மாறு வீறுடைத்து" என்னுஞ் சங்கற்ப நிராகரணக் கூற்ருல் உய்த்துணரற் பாலதாம.

'வேதாந்தத் தலைதரும் பொருளாய்ச் சற்காரியத்தாய் அறுவகைச் சமயத்துள் முதற் கண்ணதாய் அமர்ந்த இச் சைவத்துக்கு மூலவேர் வைதிகம். அதன் உச்சி சித்தாந்தம் அதனுல் இங்கே சைவம் என்றது வைதிக சைவ சித்தாந்தமாம்.

வேதசம்பந்தம் வைதிகம். சித்தாந்தம் முடிந்த முடிபு. வேதம், கன்ம காண்டந் தொடக்கமாய், வேதாந்தம் என்றும் உபநிடதம் என்றும் பேசப்படும் ஞான காண்டம் இறுதியாய் அமைந்தது. பூர்வ உத்தர மீமாம்சைகள் கன்ம காண்ட ஞான காண்ட விளக்கங்கள்.

கன்ம காண்டம், பற்றுக்களைப் பரிசோதனம செய்து சுத்தி செய்யும் முறையிற் சுத்தி செய்ய உபகாரமானது; அந்தக் கரணங்களைத் தூய்மை செய்வதென்றவாறு. அந்தக் கரணசுத்தியால பிரம விசாரம் உதிக்கும. பிரம விசாரஞ் செய்வது ஞான காண்டம்.

மலக்கட்டு ஆகிய ஊன் பொதியைத் தான் என்று மயங்கிக் கிடந்த ஆன்மாவை, 'நீ பிரமம்' 'உன்னைப் பார், பிரமமா யிருக்கிருய்' என்று உபதேசித்து, தன்னைப் பிரமம் என்று சொல்ல வைப்பது ஞானகாண்ட உபநிடதம். சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மா, ஒரு நாள் தன்னை இந்த உடம்பு என்று சொலலிக்கொண்டிருந்தது. இப்பொழுது பிரமத்தைச் சார்ந்து தன்னைப் பிரமம் என்று சொல்லும், 'நான் பிரமமாயிருக்கிறேன்' என்பது வேதாந்த மகா வாக்கியங்களுள் ஒன்று.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் 28-1-64 செவ்வாய்க் கிழமை தைப்பூசத் திருநாளை முன்னிட்டு அன்றைய தினம் இந்துசாதன அலுவலகமும் சைவப்பிரகாசஅச்சகமும் திறக்கப்படமாட்டா. -அதிபர்


பத்திரிகாசிரியர் சபை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
திரு மு. மயில்வாகனம்
திரு. மு. வைத்தியலிங்கம்
வித்துவான். இ. திருநாவுக்கரசு
வித்துவான் பொ. கந்தையனர்
சைவப்புலவர் இ. செல்லத்துரை
சைவப்புலவர் க. சி. குலரத்தினம்
திரு. நடி. சிவப்பிரகாசம்
முதலியார் செ. முத்துத்தம்பி
வித்துவான் க. கி. நடராஜன் B.O.L
திரு. அ துரைரத்தினம் ஆசிரியர்


THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சோபகிருது ஹூ தை மீ
ககஉ வெள்ளிக்கிழமை


## எமது பத்திரிகை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் நமது நாட்டில் ஐந்தாங் குரவராக அவதாரஞ் செய்து எங்கள் உயிரனைய செந்தமிழுக்கும சைவ சமயத்துக்கும் அரிய சேவை புரிந்து அவற்றை விருத்தி செய்தனர். அவர் சிவபதமடைய முன் தாம் ஆற்றிய பணியைத் தமக்குப்பின் தொடர்ந்து நடத்துவதற்கு ஒரு சபை நிறுவப்படல் வேண்டுமென்பதைத் தமமுடன் தொடர்புள்ள மாணவர்களுக்கும அன்பர்களுக்கும் தெரிவித்தனர். அவருடைய அந்தத் தூய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவருடைய மாணவர்களும அன்பர்களும 1888-ம் ஆண்டில் யாழப்பாணம சைவ பரிபாலன சபையை நிறுவினர். முதல் வருடத்தில் சிறந்த வித்துவான்களை நியமித்துக் கிராமங்கடோறும் சமயப் பிரசங்கங்கள் அச் சபையாரால் நடத்தப்பட்டன. சைவ சமயப் பிள்ளைகள் சைவ சமயத்தைக் கற்றுச் சைவஒழுக்க முடையவர்களாய்க் கல்வி பயிலவதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை 1889-ம் ஆண்டில் தாபித்தனர். தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களில் தமிழ் மொழிக் கல்வியைப்பெருக்கவும சைவசமய அறிவைப் பரப்பவும், தமிழ் மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும, ஒற்றுமையை வளர்க்கவும் தமிழச்சாகியத்தாருக்கெனப் பத்திரிகைகள் அவசியம் தேவையென்பதையுணர்ந்து சபையார் 1889-ம் ஆண்டில இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களை ஆரம்பித்தனர்.

இந்துசாதனம் ஆங்கிலப் பிரசுரத்துக்கு முதலாசிரியராகக் கடமையாற்றியவர் திருவனந்தபுரம் உயர்தர நீதிபதி திரு. த. செல்லப்பா பிள்ளையவர்கள் இந்துசாதனம் தமிழ்ப் பிரசுரத்துக்கு முதலாசிரியராகக் கடமையாற்றியவர் நாவலரவர்களுடைய தமையனர் மகன் திரு. த. கைலாயபிள்ளை அவர்கள். தொடக்கத்தில் இரு பிரசுரங்களும 4 பக்கங்கள் கொண்ட ஒரே பத்திரிகையில் இரு பக்கங்களில் ஆங்கிலப்பிரசுரமும் மற்றைய இருபக்கங்களில் தமிழ்ப் பிரசுரமும் வெளிவந்தன. 1904-ம் ஆண்டில் ஆங்கிலப் பிரசுரம் வேறாகவும் தமிழ்ப் பிரசுரம் வேறாகவும் வெளிவந்தன.

திரு. த. கைலாயபிள்ளை அவர்களுக்குப்பின் திரு. பெ. கார்த்திகேசபிள்ளை அவர்கள் 1897 தொடக்கம் 1920 வரை தமிழ்ப்பத்திராதிபராகக் கடமையாற்றினர் அவருக்குப்பின் பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் 1920 தொடக்கம் 1950 வரையும் கடமையாற்றினர். அவருக்குப்பின் 1950 தொடக்கம வழக்கறிஞர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் இந்துசாதனம் தமிழ் — ஆங்கிலப் பிரசுரங்களின் ஆசிரியராகக் கடமையாற்றிவந்துள்ளார் தமிழ் இந்துசாதனப் பிரசுரத்தின் ஆசிரியர்களாயிதுவரையிருந்தவர்கள் தெய்வக்கொள்கை, நடுநிலைமை, மனத்திண்மை, நுண்ணறிவு, சொல்லாட்சி, சமயாபிமானம், ஒழுக்கம் முதலிய குணங்கள் பொருந்தியவர்களாய், தங்கள் கட்டுரைகளைப் படிப்பவர்களுக்கும, கேட்பவர்களுக்கும், கடவுள்பக்தி, அறிவு, ஒழுக்கம் உண்டாகும் வண்ணம் கடமையாற்றினர் அவர்கள் தொண்டுக்குத் துணையாகத் திரு. சபாரத்தின முதலியார், திரு. சு சிவபாதசுந்தரம்பிள்ளை, சென்னை ஜம்புலிங்கபிள்ளை, திரு. அ குமாரசுவாமிப்புலவர் முதலிய பெரியார்கள் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்து பத்திரிகையின் சேவையைச் சிறப்பித்தனர்.

இப்பொழுது சபையார் தமிழ இந்துசாதனப் பிரசுரத்தை ஒரு பத்திரிகைப் பிரசுர சபையிடம் ஒப்படைத்திருக்கின்றனர் தமிழ மக்கள் ஈழநாட்டில் பெரும் நெருக்கடியான நிலைமையில் வாழ்கின்றார்கள். மொழியுரிமை, சமய உரிமை முதலியவற்றை இழக்க வேண்டிய நெருக்கடி நேருகின்றதேயெனக் கலங்குகின்றனர். தமிழ் மக்களுக்குத் தெய்வ பத்தியையும், நல்லறிவையும் புகட்டி, அறியாமையைத் துரத்தி அவர்களை மனத்திண்மையுடையவர்களாக்க வேண்டியதுடன், அவர்களுடைய உரிமைகளையும் காப்பாற்றுதல் இப்பத்திரிகையின் கடனாகும்

"அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

நாவலரவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி இப்பத்திரிகை சென்ற 75 வருட காலமாகத் தொண்டாற்றி வந்திருக்கின்றமையையுன்னி நாங்கள் பெருமைப்பட வேண்டும். திருவருளை முன்னிட்டு இத் தூய தொண்டினை எங்கள் சபை முட்டின்றித் தொடர்ந்து செய்ய முயர்சிக்கின்றது. இவ்விதமாகச் சபையார் புரிந்துவரும் பத்திரிகைப் பணியைத் தமிழபிமானிகள், சைவாபிமானிகள் யாவரும் ஆதரிப்பார்களாக.

எங்களுக்குப் பின்வரும் சந்ததியார் எங்களைப் பின்பற்றிச் சைவத்துக்கும், செந்தமிழுக்கும தொண்டு புரியும் வகையில் இப் பத்திரிகையை நடத்த எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு அறிவையும் ஆற்றலையும் தருவாராக.

—0—

நேயர்கள் நெஞ்சம்

## முருகன் ஆலயத்தில் பலி

—0—

கைதடி வடக்கு கயிற்றசிட்டி முருகன் ஆலயத்தில் ஆனிமாதத்தில் நடைபெறும் வைரவ பொங்கலில் கோயிற் குருக்கள் ஒரு ஆட்டுக்கடாவைத் தாம வாங்கி அதன் செவியை அறுக்கிறார். இதைத் தொடர்ந்து ஏராளமான ஆட்டுக்கடாக்களின் செவிகளும், கோழிகளின் சூடுகளும் அறுக்கப்படுகின்றன. இவ்வழக்கம் மேலும் பெருகி ஒவ்வொரு செவ்வாய் - வெள்ளிககிழமையிலும் நடைபெற்று வருகிறது. குருக்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஒவ்வொருவரிடமும் பணம் அறவிடுகிறார் பெரியார்கள் பலர் பலமுறை வேண்டியும் குருக்கள் தமது முயற்சியைக் கைவிடவில்லை.

இந்தக் கொலை முயற்சியை உடன் நிறுத்த வேண்டும். முருகன் ஆலயத்தில் இக் கொலை முயற்சி நடப்பது சைவ சமயத்திற்கே அவமானம் சைவப்பெரியார்கள், சைவசமய ஸ்தாபனங்கள் இந்த அநீதியை நீக்க ஆவன செய்யவேண்டும்.

இ. வேலாயுதர்,
தலைவர்.
கைதடி வடகது, கி, மு. சங்கம்.

## மகாசிவராத்திரி பூசை

முன்னேஸ்வரத்தில்

நிகழும் தைமீ 29ஙஉ (11-2-64) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ. வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி கோயிலில் சிவராத்திரி பூசை விசேட ஒழுங்குகளுடன நான்கு யாமமும் நடைபெறுமென அறிகின்றோம்

x x x

கீரிமலையில்

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி கோயிலில் மாசி மீ 16ம் உ (28-2-64) வெள்ளிக்கிழமை துவஜாரோகணமாகி 29ம் உ (12-3-64) வியாழக் கிழமை இரதோற்சவமும்சிவராத்திரி விசேஷமும் அடுத்தநாள் உதயத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது (ந-நி)

## கந்தபுராண உரை வெளியீடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்ட கந்தபுராணவுரைவெளியீடு எதிர்பாராத காரணங்களினுல் தடைப்பட்டிருந்தது. இப்பொழுது அதனைச் சபையார் அச்சிட ஆரம்பித்திருக்கின்றனர் முதல்நூறு செய்யுட்களும் அவற்றின் உரையும் அடங்கிய முதலாவது சஞ்சிகை சந்தா தாரருக்கும் நன்கொடையாளருக்கும் சேர ஒழுங்குகள் செய்யப்படும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்,

## சைவசாதனம்இந்துசாதனம் அதுவாழ்க

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

ஆன்மா தன்னைப் பிரமம் என்று சொல்லும் போது, ஆன்மா கண்டது ஆன்மாவாகிய தன்னையே யாம்; பிரமத்தையன்று.

'தாம் பிரமங் கண்டவர்போல்
தம்மைக் கண்டு'

என்பது உமாபதி சிவாசாரியர் வாக்கு.

உபநிடதங்களில் ஆன்மாவைப் பிரமம் என்று சொல்லுவது, பிரமமயமாகிய ஆன்மப் பிரமத்தையே யாம். இது வேதாந்தப் பொருள். இதனை விளக்க எழுந்தவைகள் 'மெய்தரு சைவமாதி இருமூன்று' சமயங்கள். "கண்ட இவை அல்லேன் நான்; காணுக் கழிபரமும் நான் அல்லேன்'' என்பது சித்தியார்.

அப்பால், ஆன்மப் பிரமம் தான் பிரமம் என்று மயங்காமல், அடிமுடி தேடிப் பரப்பிரமத்தைக் காண வைப்பது சித்தாந்தம என்க,

இவ்வாற்றால்; வைதிக சைவ சித்தாந்தத்தைச் சாதிக்க வந்த சைவ சாதனமாகிய இந்துசாதனம்,

வேதாந்தப் பிறழ்வும் அத்வைதத் திரிபும் ஆன ஏகான்ம வாதப் பாறைகளில் மோதிக்கொள்ளாமல், உலோகாயதமாதிய தக்கினயன இறக்கங்களில் வீழ்ந்து மாளாமல்,

உத்தராயண மார்க்கத்தில் மேலும் மேலும் உயர்ந்து சென்று, உய்தி தலைப்பெய்து, வைதிக சைவ சித்தாந்தப் பொருள் விளக்கமாய், இனிது பிரகாசித்து,

நீடு வாழ்க; வாழ்க; வாழ்க.

உமாபதிசிவாச்சாரியார் அருளிச்செய்த

## கொடிக்கவி

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்றொடர் — 4 )

5: ஞானதேசிகனது தீக்கையின்றிச் சிவஞானமும் பயனும் உண்டாகா:-

மந்திரம் மருந்து யோகம இரதகுளிகை என்பவற்றால் வருகின்ற சித்தி ஞானங்களும். வேத ஆகம ஞானங்களும் முக்காலமும் உணர்ந்து உரைக்கவல்ல ஞானமும் அணிமா முதலிய ஞானங்களும் ஆகிய அபரஞானம், ஆசிரியனை இன்றியும் சித்திக்கக்கூடியது; ஆனல், இறைவனது அடிசேர் ஞானம் (-சிவஞானம - பராஞானம) அவ்விறைவனே குருவாய் வந்து தீக்கைக் கிரமங்களினலே அளித்தால் அன்றி வேறு எவ்வாற்றானும் உளதாகாது என முடிந்த முடிபாகச் சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டிருக்கின்றது அது வருமாறு;

'மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்த வியோகத்தான்
மணியிரத குளிகையினுன் மற்றும் மற்றுந்
தந்திரததே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்தள் திரிகால ஞானம்
அநதமிலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும் ஆசான் அருளால் அடிசேர்ஞானம்
வந்திடுமற் றென்றாலும வாராதாகும்
மற்றவையும அவனருளால் மருவும் அன்றே."

—சித்தி: சூத்: 12; செய்: 6,

இஃதன்றி, சமய தீக்கையினுல் மந்திர உச்சரிப்புக்கு அதிகாரமும் விசேட தீக்கையினுல மந்திரம பூசை யோகம் என்பவற்றுக்கு அதிகாரமும பெறறுக் கொள்ளலாம் என்பதும், அடிசேர் ஞானத்தைத் தருவதாகிய நிருவாண தீக்கையினுலேயே ஆறு அத்துவாக்களும் நீங்கப்பெற்று ஆன்மா சிவகதி அடைய முடியுமென்பதும் மேலவரும் சிவப்பிரகாசச் செய்யுளானுமுணரற்பாலன.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கலின் தாற்பரியம்

[பண்டிதை, சைவப்புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் புளியங்கூடல் தைப்பொங்கல் விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம். தொகுத்தவர்: சரவணையூர் 'சரவணக்குமான்']

தமிழன் வாழ்வில் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் திருநாள் தைப்பொங்கல். உழவன் இல்லையேல் உலகமேயில்லை. உழவனே உயிர்கொடுப்பவன். எனவே, வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறன் உழவன். அவர் பாடுபட்டதற்குப் பயனைச் சூரிய சத்தி மழையைப் பெய்விக்கின்றது உழவனுக்கு மழை வேண்டும். எனவே, உழவன் சூரியனுக்குப் பொங்கல் செய்வதில் நியாயமிருக்கிறது. சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் உழவனுடைய பெருமைபேசப் படுகிறது. "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த மனப்பான்மையை உணர்த்துவது தைப்பொங்கல் விழா. பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிய தாயுமானவர் நம்மையும் அந்த வெள்ளத்தில் மூழ்கச் செய்கிறூர், காகம் உண்ணும்போது தன் இனக் காகங்களை அழைக்கிறது. உயர்ந்த மனப்பான்மையை - பழந்தமிழர் பெருமையை எடுத்துக்காட்டும் இயல்பினை யுடையது உழவன் திருநாள்.

வாழ்வுக்குப் பொங்கல், ஆக்கத்திற்குப் பொங்கல் என்பதை உணர்ந்தோம் இனி அது அருளுக்கும் வழிகாட்டுகிறது. புல், பூண்டுகளை அழித்து நெல் விளைவை நாம வருவிக்கிறோம் தீயகுணங்களை நீக்கி அருள் விளைவையும் நாம் வருவிக்க வேண்டும், இத்தகைய ஒரு சிறந்த தன்மையை தமிழன் திருநாளாம் தைப் பொங்கல் தினம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.


கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M,B. 4322
உடுவில் மருதப்பர் பத்மநாதன்
—வழக்காளி
எதிராக
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்
1, கதிரவேலு சிவக்கொழுந்து வும் மனைவி
2. நாகம்மா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4322-ம் இலகக வழக்கில் எனககுக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக காணியை 1964-ம்ஞூ பங்குனிமீ 14-ந்உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் னின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3605-ம். 9-10-61 தொடக்கம் 21-6-62 வரைக்கும் ரூபாய் 3000-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 221-35 சதம்.

ஆதன விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவில் இறை "அத்தாய்" பர. வில. இலா. 6 குளி 16¾. கிணற்றுப்பாகமும் தூர்வை விலமும் 2½ குளி. இக்காணியிலும் மறு காணிகளிலும் இருக்கும் ஆடுகால் துலாவும், எல்லை கிழக்கு சின்னக் குட்டி கோவிந்தனினுதனமும், வடக்கு ஐயன் கைம்பெண் பொன்னியினுதனமும், கிணற்றுக்குவிடப்பட்ட தூர்வைவிலமும் பொன்னியினுதனமும். மேற்கு ஒழுங்கை. தெற்கு இராமு சண்முகமும் பெண்செல்விகரும் உரிய ஆதனம் இதன் பதிவு H 307/147,

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்.
Commissioner of Sales.
22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 21-1-64.
M. 269 24-1-64.


# மாணவர் பகுதி

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்"

சைவ மாணவர்கள் ஐயந்திரிபற்ற சமய அறிவைப் பெறுதற்கும், சமயபாடப் பரீட்சைகளில் விசேட சித்தியடைதற்கும் உறு துணையாக இப்பகுதி இவ்விதழில் ஆரம்பமாகிறது.

மாணவர்க்கு உபயோகமான சிறு கட்டுரைகள், வினுவிடைகள் முதலியவற்றேடு, சைவ சித்தாந்தத்துறையில் வழங்கிவரும் சொற்களடங்கிய அகராதி ஒன்றும் அடுத்த வாரம் தொடக்கம் இப்பகுதியிற்றொடர்ந்து வெளிவரும்.

சைவசமயத் தொடர்புடைய 'நியாயமான' வினுக்களுக்கு விடை பெற விரும்பும் மாணவர்கள் இப்பகுதியிலுள்ள வினுச்சீட்டை நிரப்பி "ஆசிரியர் 'சிறுவைகிழார்', மாணவர் பகுதி, இந்து சாதனம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒரு சீட்டில் ஒரு வினு மாத்திரம் எழுதலாம்; சீட்டின்றி அனுப்பப்படும் வினுக்கள் கவனிக்கப்படமாட்டா.

—ஆசிரியர், 'சிறுவைகிழார்'

வினு:— ..................................................

..................................................

வினுவியவர் பெயர்:— ..................................................

பாடசாலை முகவரி } ..................................................

வகுப்பு:— ..................................................

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த... கொடிக்கவி

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

"விரும்பியமந் திராதிகார மர்ச்சனு திகார
மேவும்யோ காதிகார மெனச் சமய விசேடம்
வரும்;பொருவி னிருவாண(ம்): மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
இரங்கடைவிற் றுகைபதினென் றெண்பத்தோன்றைம்பத்
திரு நூற்றே டிருபத்து நாலாறு றைந்தற் [றோன்
பரந்த நெறியறு வகைய மொருவி, நினைவரிதாம்
பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே",
சிவப்: 9.

6. தீக்கை:-

பாசத்தைக்கெடுத்து முத்தியைக் கொடுத்தல் தீக்கை எனப்படும். (தீ - கொடுத்தல் க்ஷா - கெடுத்தல்) அத் தீக்கை ஏழுவகையினது. அவை நயனதீக்கை, பரிசதீக்கை, மானசதீக்கை, வாசகதீக்கை, சாத்திர தீக்கை, யோகதீக்கை, அவுத்திரிதீக்கை என்பன.

நயனதீக்கை:- மீன் தனது சினைகளைப் பார்த்தலால் குஞ்சுகளை உண்டாக்குகல் போல், குரு சீடனைத் தலை தொடக்கம் கால்வரை அருட்பார்வை செய்து அவனது ஆணவத்தைக் கெடுத்தல் நயனதீக்கை எனப்படும், இது சட்சுதீக்கை எனவும் படும்.

பரிசதீக்கை:-

பறவை தன் சிறகினுல் முட்டையைப் பரிசிப்பதால் குஞ்சுகளை உண்டாக்குதல்போல், குரு சீடனைத் தமது கரசரணங்களால் பரிசித்து அவனுடைய மாயாமலத்தைக் கெடுத்தல் பரிசதீக்கை எனப்படும்.

மானசதீக்கை:-

ஆமை கரையிடத்திருந்து தனது முட்டைகளை மனதிலே நினைத்தல் மாத்திரையானே குட்டிகளை அம்முட்டையினின்றும் தோற்றுவித்தல்போல, குரு தமது சீடனைத் தமது அருவுருவாய்ப் பாவித்தலினுலை அவனது ஆன்மபோதத்தை நீக்கிச் சிவபோதத்தை உண்டாக்குதல் மானச தீக்கையாம்.

வாசக தீக்கை:-

குரு திருவைந்தெழுத்தையும் பருவெருரு மந்திரங்களையும் அந்தந்த எழுத்துக்களுக்குரிய கால அளவுகளோடு உச்சரித்துச் சீடனுக்கு ஞானத்தை உபதேசித்தல் வாசக தீக்கை எனப்படும.

(தொடரும்)

## திருமந்திர மாநாட்டு 2-ம் நாள் நிகழ்ச்சிகள்

சிதம்பரம் தை 14.

திருவாவடுதுறை ஆதீனக் கொலு மண்டபத்தில் நேற்று மாலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள முன்னிலையில் 11-வது திருமந்திர மகாநாட்டின் 2-வதுநாள் மாநாடு ஆதீன மகாவித்வான் நாகர்கோவில் ஸ்ரீ கே. ஆறுமுகநாவலர் தலைமையில் துவக்கமாகியது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், மாநாட்டுத் தலைவரானமகாவித்துவான் ஸ்ரீ ஆறுமுகநாவலரை, ஆதீன வித்வான்களான திருச்சி ஏ. கே. சி. நடராசன் குழுவினரது கிளாரினெட், குளிக்கரை பிச்சையப்பா குழுவினரது நாதசுரக் கச்சேரிகளுடன் வரவேற்று, மாலை சூட்டி, பொன்னுடை போர்த்திக் கௌரவப்படுத்தினுர்கள்.

மகாவித்துவான ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகர் வரவேற்புரை கூறுகையில், மனிதனின் உழைப்பு ஒருபக்கமும் அதன் ஊதியம மற்றோர் பக்கமும் கிடைப்பதை நாம் காண்கின்றோம். ஆனுல் இந்த உழைப்பு அவ்வாறில்லை; உழைப்பு எங்கு இருக்கின்றதோ அங்கேயே ஊதியமும் கிடைக்கக் கூடியதாகும் என்று கூறினுர்

மகாநாட்டுத் தலைவரான மகாவித்துவான் ஸ்ரீ கே. ஆறுமுகநாவலர் தலைமையுரையில், "நமது சமயம் ஒப்புயர்வற்ற சமயமாகும். சிவனடியே சிந்திக்கும் சைவசமயமே நமது சமயம், இதனைச் ஸ்ரீ. மெய்கண்டதேவர் நன்கு கூறியிருக்கின்றூர். சரியை, கிரியை யோகம் ஞானம் ஆகிய 4 மார்க்கமும் சங்கரனை அடையும் வழிகளாகும். ஞான நிலையை நோக்கிப் பறப்பதற்குப் பத்தி யோகம் இரண்டும் இருசிறகு [illegible] வாழ்வை மட்டும் கொடுக்கக் கூடியதாகும். மானிடப்பிறப் பிறகு சிவயோகமே மிகவும் முக்கியமானது, அம்முறையிற்றுன் திருமூலர் இங்கு (திருவாவடுதுறைக்கு)ப் பறந்து வந்து கூடுவிட்டுக்கூடுபாய்ந்து திருவாவடுதுறையில் 3000 ஆண்டுகள் சிவயோகத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 பாடல்கள் பாடியுள்ளார்" என்று குறிப்பிட்டார்கள்.

திரு. மா, பா, "தினமணி" கிருபர்

### சைவப் பிரசங்கம் நாவலர் பெருமானை நினைவூட்டுகிறது

"அகில இலங்கைப் பொது சனசேவைச் சங்கம் இன்றுவரை மூன்று தேவஸ்தானங்களில் சைவசமய வளர்ச்சிக் கின்றியமையாத பிரசங்கங்களைச் செய்வித்துவருவது சிறந்த சேவையாகும். வைத்தீஸ்வரன தேவஸ்தானத்தில் அதனை நடாத்துவது நாவலர் பெருமானையும் அவர்செய்த சற்பிரசங்கங்களையும நினைவூட்டுகிறது. இப்பணியை இச்சங்கத்தார் தொடர்ந்து நடாத்திவருவது இன்றியமையாதது'.

21-1-64ல் ஷெ சங்கத்தார் வைத்தீஸ்வரன் கோவிலில் நடாத்திய சைவப் பிரசங்க வைபவத்தை ஆரம்பித்து வைத்த முன்னைநாள் வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள். இவ் வைபவத்தில் சமயப்பிரசாரகர் திரு சி. தம்பிஐயா அவர்கள் 'வரகுண பாண்டியனுக்குச் சிவலோகங் காட்டியமை, என்னும் பொருள்பற்றிப் பிரசங்கஞ் செய்தார்கள்.

## சித்தர்கள் கண்ட...

1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்த நன்றியையுமுணர்ந்து அவருக்குக் குருபூசை செய்து கொண்டாடி மகிழ்ச்சி அடையாதது வருந்தத்தக்கது

'உள்ளது போகாது இல்லது வாராது' என்பது பழமொழி. இது சற்காரியவாதம் எனப்படும். சித்தாந்தம் சற்காரியவாதத்தை அடிப்படையாகக்கொண்டது. சற்காரியவாதத்தின் வழிநின்று சிவஞான சுவாமிகள் சிவஞானபோதத்துக்கு உரை கண்டுள்ள மாண்பு போற்றற்குரியது.

கண்கூடாக விளங்கும் உலகு மாயாகாரியமானது. மாயாகாரியமாகிய உலகு நாம ரூபங்களை உடைமையால் அது சுட்டி யுணரப்படுவதாகிறது. சுட்டி உணரப்படும் ஒன்று என்றும் ஒரு தன்மையதாயிராது அஃது அழிதன்மாலையதே. அழிவு எதற்கு? நாம ரூபத்துக்கா? மூலத்துக்கா? அழிவு நாம ரூபத்தக்கே உண்டு என்றும் மூலத்துக்கு இல்லை என்றும் விஞ்ஞான நூல் கூறும். ஆகவே நாம ரூபங்கள் உள்பொருளாய மாயையினின்றும் தோன்றி அம்மாயையிலேயே ஒடுங்குந்தன்மையன. இம்முறையின் உலகு மாறுதலடையும் உள்பொருளென்பதைச் சிவஞானமுனிவர் திறம்படச் சிவஞானபோத வாயிலாக விளக்கஞ் செய்கிறூர்.

அறிவு ஒன்றே உள்பொருளென்று கூறுவோர் மாயைக்குத் தனி இருப்புக் கூறுவதில்லை. மாயைக்குத் தனி இருப்புக்கூறின் இரு பொருளுண்மைக்கு இடந்தருவதாகும் என்பது அன்னர் எண்ணம் போலும். அவர் மாயை அறிவின் சாயலாகக்காணப்படும் பொய்த்தோற்றமுடைய ஒன்று என்றும், அஃது உள்பொருள் அன்று என்றும், அநிர்வசனியம் என்றுஞ் சொல்வர். மாயை சடப்; அறிவில்லாதது. அறிவில்லாத ஒன்று அறிவாகிய ஒன்றினின்றும எங்ஙனந் தோன்றும்; இதைக் கடாவிடைகளான் சிவஞானமுனிவர் தெளிவு செய்துள்ளதை ஆராய்ந்து பார்க்க.

—தொடரும்,

### ஆலய பரிபாலன சபை வருடாந்தப்பொதுக்கூட்டம்

சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமிஆலய பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற தைப்பொங்கல் தினத்தன்று வைத்தியர் திரு. வே. சோமசுந்தரம் (சைவ சித்தாந்தப் புலவர்) தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி திரு. ஏ. சண்முகரத்தினம் வருடாந்த அறிக்கையைச்சமர்ப்பித்தார். வரவு செலவு வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதும் புது வருட நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வே. சோமசுந்தரம் ( வைத்தியர் ) செயலாளர் திரு. செ சுப்பிரமணியம். பொருளாளர்: திருமதி கண்மணி சதாசிவம், காரியஸ்தர் திரு. கு, வைரமுத்து.

நஃநி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திர மகாநாடு

**[ திருவாவடுதுறை ஆதீனம் ]**

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

சிதம்பரம், தை 1.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஆணையின்படி, ஆதீனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ. நமசிவாய மூர்த்திகளின் குருபூசை மகோற்சவத்தின் முதல் நாளாகிய நேற்று மாலை கொலுமண்டபத்தில் 11-வது ஆண்டு "திருமந்திர" மகாநாடு சென்னைப் பல்கலைக்கழகம் தத்துவப் பேராசிரியரான டாக்டர் ஸ்ரீ. டி. எம். பி. மகாதேவன் தலைமையில் ஆரம்பமாகியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராசிரியர் ஸ்ரீ. எல். பி.கே. ஆர். இராமநாதஞ் செட்டியார் 11 வது திருமந்திர மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் "11-வது திருமந்திரமகாநாட்டைத் திறந்து வைக்கும் பாக்கியம் பெற்றதைக் குறித்து நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன் திருமந்திரம் தமிழ் நூல்களுக்குள் ஞான நூலாகும் திருமந்திரம 3000-க்கு மேற்பட்ட பாடல்கள் உள்ள நூலாகும். சென்ற 10 ஆண்டுகளாக நமது குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருளால் நாம் திருமந்திர நூலைக் கற்கவும், கேட்கவும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதற்கு நாம் என்றென்றும் நமது குருமகா சந்நிதானம் அவர்களுக்குக் கடப்பாடுடையவர்களாகவே இருந்துகொண்டுவரல் வேண்டும். திருமந்திர நூல் நகைச்சுவையாகவும், தத்துவங்கள் நிறைந்துள்ளதாகவும் அமைந்திருக்கின்றது" எனக் குறிப்பிட்டார்.

மகாநாட்டுத்தலைவர் டாக்டர் ஸ்ரீ. டி. எம். பி. மகாதேவன் தலைமையுரை கூறுகையில் "மனிதன் சிவபோகத்தை அடையமாட்டான் என்பதனைத் திருமூலர் உணர்ந்தே திருமந்திர நூலை நமக்கு அளித்திருக்கின்றார். திருமூலரின் ஒரு பாசுரத்துக்கும் பொருள்காணப் பல வருஷங்கள் பிடிக்கும். திருமூலரின் திருமந்திரத்தில் மூன்றாவது தந்திரம் அட்டாங்க யோகம் பற்றிக் கூறுவதாகும்; அட்டாங்கயோகம் ஏற்பட மனிதனிடம் அடக்கம, சாந்தி ஏற்படல் வேண்டும்; அதற்கு ஆண்டவனைப்பற்றிச் சிரவணம் செய்ய வேண்டும்; மற்ற நாடுகளைக்காட்டிலும் நம்முடைய பாரதநாடு ஒன்று தான் அந்நிலையில் ஞானம் அளிக்கக்கூடிய பொக்கிஷம் போல விளங்குகின்றது ஞானம் அடைவதற்கு யோகம் சாதனமாகும். அட்டாங்கயோகம் 8 படிகளாகக் கொண்டதாகும்; வெளி ஆசைகளை வைத்துக்கொண்டு யோகம் செய்தால் கேடு ஏற்படும்" என்றும் கூறினார்.

மேலும் டாக்டர் ஸ்ரீ. மகாதேவன்பேசுகையில் "ஞானம் பெருக யோகம் செய்ய வேண்டும். ஞானம் பெருகினால் வீடு பேற்றை அடையலாம். யோகம் என்பது மனதை அடக்குவதேயாகும்; மனதை அடக்குவதென்றால் சித்த விருத்திகளை அடக்குவது தான் யோகம் என்பதாகும். ஆகவே ஞானத்தை அடைய அட்டாங்க யோகம் சிறந்த வழியென்பதனை நாம் உணரல் வேண்டும். இதனைத் தான் பதஞ்சலி முனிவரும் உபநிஷத்தில் வற்புறுத்தியிருக்கின்றார். ஆகவே பந்தத்துக்கும், மோட்சத்துக்கும் 'மனம்'தான் காரணம; பந்தங்களை விலக்கிக்கொண்டால் தான் மோட்சம் அடையலாம்; மனதை அடக்குவது தான் யோகவழி; இதனைத் தான் திருமூலர் அநுபூதியாகத் திருமந்திரத்தில் கூறியிருக்கின்றார்" எனக் குறிப்பிட்டார்.

சென்னை ஸ்ரீ. அ. ச. ஞானசம்பந்தம் "பொறையுடைமை" என்பதுபற்றிப் பேசுகையில் பெரியோர்களைத் துணைக்கொள்ள வேண்டுமானால் பொறுமையை விட்டு விலகல் வேண்டும், திருமூலர் மந்திரத்தில் பல்லியை உவமானங் கூறியிருக்கின்றார். ஆகவே பொறுமை ஏற்படுவதற்கு பொறுமை என்ற பல்லியை ஒவ்வொருவரும் சங்காரஞ் செய்துவிட வேண்டும் என்று குறிப்பிட்டார்

ஸ்ரீலஸ்ரீ. மகாசந்நிதானம் அவர்கள் மலைநாட்டின் நினைவாக 10-வது திருமந்திர மகாநாட்டு மலர், திருமந்திரக் கருத்து, திருமந்திரக்கட்டுரை என்ற மூன்று நூல்களையும் வெளியிட்ட பின் முதல்நாள் மகாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

—0—

## சைவப் பிரசங்கம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் 17-1-64 தொடக்கம் வெள்ளிக்கிழமை தோறும் சைவ சமயப் பிரசங்கங்கள் நடத்த அகில இலங்கைப பொதுசன சேவைச்சங்கம் ஒழுங்குசெய்திருக்கின்றது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே

சுதுமலை
1. தம்பிப்பிள்ளை செல்லத்துரையும் பெண்
2. இராசமுதத்துவும்
—வழக்காளிகள்.

இல M.B. 5240

எதிராக

சுதுமலை முருகுப்பிள்ளை ஞானப்பிரகாசம் மகள் ஆச்சிகுட்டி மாகறற்றின் ஆதனங்களின் சட்டரீதியான பிரதிநிதிகள்:-
1. கல்லையா நன்னித்தம்பி சுதுமலை
2, கல்லையா கனகசுந்தரம் சுதுமலை தற்போது கொழும்பு, 1, வவசேவர் வியாபாரக்கம்பனி வரைவுளதில் வசிப்பவர்,
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 5240-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஒரு துண்டுக்காணி 1964-ம் ஆ மார்ச்சுமீ 5உ (5-3-64) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 2234-ம், இன்னும் ரூபா 1500-க்கு 26-11-62 தொடக்கம் 13-5-63 வரை 9% வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 306-50 ம்.

காணியின் விபரம்:

வ-மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று சுதுமலை இறை "கூரை தட்டிக்காடு" E 78/34-ல் பதியப்பட்டபடி நில, பர. 10½, இன்னும் E 45/20-ல் பதியப்பட்டபடி நில. பர, 5 குளி 11 1/3. இருவகையும் உறுதியின்படி கூடியது நில. பர, 16 குளி 2 1/3. ஆனால் 10-6-50ல் உத்தரவுபெற்ற உலாந்தா எஸ். மூத்துக்குமாரசாமி அவர்களால் 26/1950-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படியும் E 279/182-ல் பதியப்பட்டபடியும் நில. பர. பதின்மூன்றும் கல்வீடும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் மேற்குப்பாகத்தில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும், இதற்கெல்லை கிழக்கு என். தம்பிப்பிள்ளையினுதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு சரவணமுத்து பெண் நல்லம்மாவினுரிமைக்காரரினுதனமும், இக்காணிக்குரிய அநாதியான கிணற்றுக்குப் பாவிக்கும் கையொழுங்கையும, தெற்கு கிணற்றுத தார்வை நிலமும் அருணசலம் கைம்பெண் ஆச்சிப்பிள்ளையினுரிமைக்காரரினுதனமும் அவர்களால் கிணற்றுக்குப் பாவிக்கும் கையொழுங்கையும். இதடங்கவிற் சொரியலாயவரைவாசி

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.
21-1-64.
M. 267 24-1-64

---

## கோட்டு வற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்திறிககோட்டில்

நாவற்குளி
செல்லையா கைம்பெண் பாக்கியம்
—வழக்காளி.

வழ. இல, 2136

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு விசுவலிங்கம் தாமோதரம்பிள்ளை —எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 2136-ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணுமாதன விடாப்பில் விபரிக்கப்படுமாதனம 1964-ம் ஆ மாசி மீ 22-ந உ சனிக்கிழமை காலை 10 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 2390-ம். 30-12-60 தொடக்கம் 7-7-61 வரையும் ரூபா 2000-த்துக்கு 12% வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-91 சதமும், இதில் கொடுபட்ட தொகை ரூபா 800 கழித்து மிகுதி,

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று சாவகச்சேரியிறை "மணற்காடு" நில, பர, 8¼ எட்டேகால் எல்லை கிழக்கு வேதவனம் கந்தையாவுக்குரியவாதனம், வடக்கு தம்பர் மார்க்கண்டுவுக்குரியவாதனம், மேற்கு காங்கேசு பொன்னையாவுக்குரியவாதனம், தெற்கு தெரு. இவ்வெல்லைக்குட்சேர்ந்த நிலம் பனைகள் தென்னைகள் மற்றும் பயிர்கள் அடங்கலிற் சொரியலாய் 14/15 பங்கு. பதிவு F 226/32,

கொமிஷனர்.
சாவகச்சேரி. 21-1-64.
M 268 24-1-64

---

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 1

இவ்வாரம் 26-1-64 — 1-2-64

## உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

அந்நியர் அயலவர் உதவி, பழைய முதலீட்டில் நன்மை, அதிக செலவு, வசைபரப்புவோர் தொல்லை என்பன உண்டாம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

தந்தையாருக்குச் சுகவீனம், அல்லது தந்தை வழியினரால் தொல்லை, தேவையில்லாத கண்டனங்கள், பண நன்மை உண்டாம்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

27-ந் திகதிக்குப்பின் சொந்தப் பிரச்சினைகள் தீர்தல், நெருக்கடி குறைதல், நண்பர், இனத்தவர் உதவி என்பன உண்டாம். சமூக வெற்றி நிச்சயம்,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்ப நிலைமைகள் மேலும் திருப்தியற்றிருக்கும். செலவுகள் பெருகும். மேலிடத்தாரின் சலுகைகள் நிச்சயம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிரிக்கு இடையூறு, உமக்குப் புகழ் நிச்சயம், குடும்ப கலகம் - குடும்பத்தில் தப்பபிப்பிராயம், மனத்துயர் என்பன உண்டாம்.

கன்னிராசி உத்தரம் 2,3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

எதிர்ப்புக்களிலிருந்து 27-ந் திகதிக்குப்பின் விடுபடுவீர். உடல் நிலை திருந்தவேண்டும். பண்பளவில் நல்ல வாரம்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன், அல்லது நண்பருடன் மோதல், சிறிது சுகவீனம், எண்ணப்படி நடந்து கொள்ளத்தடை என்பன உண்டாம்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஞாயிறு திங்கள் எச்சரிக்கை, மிகுதி நாட்கள் புது முயற்சிக்கு ஏற்றவை. பண வரவு நிச்சயம். சிறு சுகவீனங்கள உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பத்தகராறு உண்டாம். திங்கள் மாலை, செவ்வாய், புதன், வியாழன் காலை எச்சரிக்கை, மிகுதி நாட்கள் ஓரளவு நல்லவை. சண்டைகளுக்கு மூக்க வேண்டாம். விவசாய வெற்றி நிச்சயம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

27-ந் திகதிக்குப்பின் சொந்தச் சிக்கல் சில தீர்தல், பழைய முதலீடுகளால் நன்மை, எதிரிகளுக்கு நிச்சயமான இன்னல் உண்டாம். வியாழன், வெள்ளி. சனி எச்சரிக்கை.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

பண நன்மை. புதிய பிரச்சினைகள், உடல்நிலைக் குழப்பம் உண்டாம். இறுதி நாள் எச்சரிக்கை,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

புதிய பொறுப்புக்கள், இனத்தவருடன் மோதல், பண நன்மை, கல்வி ஈடுபாடுகளில் வெற்றி உண்டாம்.

உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற

பவுண், வைர ஆபரணங்களுக்கு

சிறந்த இடம்:

## எஸ். கே. எஸ்.

"தங்க மாளிகை"

கன்னநிட்டி, :: யாழ்ப்பாணம்

போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 3ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 24-1-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org